THANZEEL ACADEMY
FOR ISLAMIC STUDIES

மீலாத் விழா கொண்டாட்டம்

ஐயங்களும், தெளிவுகளும்

மூலம்
அத்துரருஸ் ஸனிய்யா

தமிழில்
அல்இத்கான் மொழிபெயர்ப்பு மையம்

மேற்பார்வை
அப்துல்லாஹ் முஹம்மது உவைஸ்
(Meezani, Phd (R) King Saud University, KSA)

மீலாத் விழா
கொண்டாட்டம்
ஐயங்களும், தெளிவுகளும்

மூலம்

அத்துரருஸ் ஸனிய்யா

தமிழில்

அல்இத்கான் மொழிபெயர்ப்பு மையம்

மேற்பார்வை

அப்துல்லாஹ் முஹம்மது உவைஸ்

(Meezani, Phd (R) King Saud University, KSA)

About This Book

Name Of The Book	மீலாத் விழாக் கொண்டாட்டம் - ஐயங்களும் தெளிவுகளும்
Name In Arabic	: الاحتفال بالمولد النبوي - شبهات وردود
Author	: Alavi Bin Abdul Qadar Assaqqaf
Translator	: Ithqaan Center For Translation Service
Language	: Tamil
Edition	:
Total Pages	: 35
Desinged By	: Tanzeel Academy - Graphics Department

THANZEEL ACADEMY
FOR ISLAMIC STUDIES

TANZEEL ACADEMY
Deparment of Graphics

Galagedara, Kandy - Srilanka
+94 740860022

முன்னுரை

காலத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு பலரிடமும் காணப்படும் மீலாத் விழா சம்பந்தமான சில சந்தேகங்களுக்கு தெளிவுகள் வழங்கப்பட்ட ஒரு கைநூலை மிகவும் குறுகிய காலத்தில் மொழிபெயர்த்து வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். இச்சிறு நூலில் மீலாத் விழாவை ஆதரிப்போர் அறிந்தோ அறியாமலோ முன்வைக்கும் பல்வேறு ஆதாரங்களுக்கான அறிவுபூர்வமான தெளிவுகள் வழங்கப்பட்டுள்ளன. நடுநிலையோடு சிந்திப்பவர்களுக்கு நிச்சயமாக இவைகள் பயனுள்ளவையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

ரபீஉல் அவ்வல் மாதத்தின் ஆரம்பத்தில் இதனை வெளியிட வேண்டுமென்பதற்காக இந்நூலின் பக்கங்களை பல மொழிபெயர்ப்பாளர்களுக்கு வழங்கி வெளியீட்டை துரிதப்படுத்தியுள்ளோம்.

<u>மொழிபெயர்ப்பாளர்கள் விபரம்</u>

1. **ஸஹ்ரூன் ஸெய்யத் றமழான்** (Salafi, B.A HONS, M.A, PGDE).
2. **ஹாமித் பத்ஹூர் ரஹ்மான்** (Abbasi, B.A).
3. **ஸஃஃத் முஆஸ்** (Abbasi, LLB (R) University of Jaffna).
4. **அப்துல்லாஹ் முஹம்மது உவைஸ்** (Meezani, Phd (R) King Saud University, KSA).
5. **ஸல்மான் முஹம்மது உவைஸ்** (Meezani, M.A (R) Alqaseem University, KSA).
6. **முஹம்மத் ஷகீல் அமீர்** (Meezani, M.Ed (R) King khalid University, KSA).
7. **அஹ்ஸன் அஸ்மன்** (Muhajiri, M.Ed (R) King Khalid University, KSA).

ஐயம் 01

﴿قُلۡ بِفَضۡلِ ٱللَّهِ وَبِرَحۡمَتِهِۦ فَبِذَٰلِكَ فَلۡيَفۡرَحُواْ هُوَ خَيۡرٞ مِّمَّا يَجۡمَعُونَ ٥٨﴾

«அது அல்லாஹ்வின் பேரருளைக் கொண்டும், அவனுடைய அருளைக் கொண்டுமுள்ளதாகும். ஆகவே அதைக் கொண்டு அவர்கள் சந்தோஷமடையட்டும்.» (அல்குர்ஆன் 10:58)

என்ற அருள்மறை வசனம் நபிகளாரது பிறப்பைக் கொண்டாடுவோர் முன்வைக்கும் ஆதாரங்களில் ஒன்றாகும். சந்தோஷங்களில் பெரிய சந்தோஷம் அல்லாஹ்வின் தூதருடைய பிறப்பை எண்ணி அடையும் சந்தோஷம் என்றும், அதனைக் கொண்டாடுவது சந்தோஷத்தை வெளிப்படுத்துவதாகும் என்றும் இந்த வசனத்தை மேற்கோள்காட்டி அவர்கள் வாதிடுகின்றனர்.

தெளிவு

இது இஸ்லாமிய சான்றோர்கள் யாருமே கூறாத ஒரு கூற்றாகும். அல்லாஹ் நமக்கு அருள்கள் புரிந்து நம்மை சிறப்பிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் நாம் கொண்டாட்ட தினமாக எடுக்க முடியுமா? (அவ்வாறு எடுப்பதில்லையே.)

மேலும் அல்லாஹ் மேற்குறித்த வசனத்தில் தனது அருள், கருணையை எண்ணி சந்தோஷம் அடையுமாறு கூறியிருப்பது நபிகளாரது பிறந்த தினம் பற்றியல்ல. மாறாக இந்த வசனத்துக்கு முன்னைய வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அல்குர்ஆன்

இறக்கியருளப்பட்டமை பற்றியாகும். அல்குர்ஆன் விளக்கவுரை அறிஞர்கள் எவரும் இந்த வசனத்துக்கு இவர்கள் கூறுகின்ற விளக்கத்தை வழங்கவில்லை.

ஐயம் 02

நபிகளார் ﷺ அவர்களது பிறந்த தினத்தைக் கொண்டாடுதல் என்றால், அவர்களைக் கண்ணியப்படுத்துவதும், அவர்களது துதி பாடுவதுமாகும் என்று கூறும் இவர்கள் இதற்கு ஆதாரமாக பின்வரும் வசனத்தை முன்வைக்கின்றனர்.

﴿فَٱلَّذِينَ ءَامَنُواْ بِهِۦ وَعَزَّرُوهُ وَنَصَرُوهُ وَٱتَّبَعُواْ ٱلنُّورَ ٱلَّذِىٓ أُنزِلَ مَعَهُۥٓ أُوْلَٰٓئِكَ هُمُ ٱلْمُفْلِحُونَ ١٥٧﴾

"எவர்கள் அவரை உண்மையாகவே நம்பிக்கை கொண்டு, அவரைப் பலப்படுத்தி அவருக்கு உதவி செய்து, அவருக்கு இறக்கப்பட்ட பிரகாசமான (இவ்வேதத்)தைப் பின்பற்றுகிறார்களோ அவர்கள்தான் வெற்றி பெற்றவர்கள்." (அல்குர்ஆன் 07:157).

தெளிவு

நபிகளார் ﷺ அவர்களது பிறந்த தினத்தைக் கொண்டாடுவது அண்ணாரைக் கண்ணியப்படுத்துவதாகும் என்று கூறுவதற்கு மேற்குறித்த வசனத்தில் எந்த ஆதாரமும் இல்லை. நபியவர்களை கண்ணியப்படுத்துவதாக மேற்கொள்ளப்படும் செயல்கள் அனைத்தும் அவற்றைச் செய்வோர் கண்ணியமாக நினைத்ததற்காக அவை அனுமதிக்கப்பட்டதாகிவிடாது. நபிகளாரை சங்கீதக் கருவிகளைப் பயன்படுத்தி கண்ணியப்படுத்த முடியாது. கிறிஸ்தவர்கள் ஈஸா عليه السلام அவர்களை எல்லை கடந்து புகழ்ந்ததைப் போல நபிகளாரைப் புகழ முடியாது. ஏனெனில் நபி ﷺ அவ்வாறு செய்ய வேண்டாம் என

தனது சமூகத்தைத் தடுத்துள்ளார்கள். எனவே நபிகளாரது பிறப்பைக் கொண்டாடுவதும் இந்த வகையையே சாரும்.

ஐயம் 03

عن أبي قتادة الحارث بن ربعي: أنّ رَسولَ اللهِ ﷺ سُئِلَ عن صَوْمِ يومِ الاثْنَيْنِ؟ قالَ: ذاكَ يَوْمٌ وُلِدْتُ فِيهِ، ويَوْمٌ بُعِثْتُ، أوْ أُنْزِلَ عَلَيَّ فِيهِ.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களிடம், திங்கட்கிழமையன்று நோன்பு நோற்பது பற்றிக் கேட்கப்பட்டதற்கு, "அன்றைய தினத்தில்தான் நான் பிறந்தேன்; அன்றுதான் "நான் நபியாக நியமிக்கப்பட்டேன்" அல்லது "எனக்குக் குர்ஆன் (முதன்முதலில்) அருளப்பெற்றது" என்றார்கள்.[1]".

மேலுள்ள ஹதீஸை ஆதாரமாகக் கொண்டு நபியவர்களே தமது பிறந்த நாளைக் கொண்டாடியுள்ளார்கள் என வாதிடுகின்றனர்.

தெளிவு

இந்த ஹதீஸுக்கான மேற்கூறிய விளக்கத்தை எந்தவொரு அறிஞரோ ஹதீஸ் விரிவுரையாளர்களோ குறிப்பிடவில்லை. நபி ﷺ அவர்களது பிறப்புக்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவது, நபியவர்கள் பிறந்த தினமாகிய ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் நோன்பு பிடிப்பதன் மூலமே நிறைவேறும். நபியவர்களும் அவ்வாறுதான் செய்துள்ளார்கள். மறுமை வரை தொடரும் ஒரு ஸுன்னாவாக தமது சமுதாயத்திற்கு அதையே வழங்கியுமுள்ளார்கள். இதுவல்லாமல், பாடல்கள் மற்றும் புகழாரங்கள் மூலம் கொண்டாடுவது நன்றிசெலுத்துவதாகமாட்டாது.

1 அறிவிப்பவர்: அபூகதாதா رضي الله عنه, நூல்: முஸ்லிம் 1162.

ஐயம் 04

عن أوس بن أبي أوس وقيل أوس بن أوس والد عمرو: إنّ من أفضلِ أيامِكم يومَ الجمعةِ، فيه خُلِقَ آدمُ، و فيه قُبِضَ، و فيه النفخةُ، و فيه الصعقةُ، فأكثروا عليَّ من الصلاةِ فيه، فإنّ صلاتَكم معروضةٌ عليَّ.

"வெள்ளிக்கிழமை உங்களது மிகச் சிறந்த நாட்களில் ஒன்று, அந்நாளிலேயே ஆதம் عَلَيْهِ السَّلَام படைக்கப்பட்டார்கள், மரணிக்கச் செய்யப்பட்டார்கள். ஸூர் ஊதப்படுவதும், படைப்புக்கள் அழிக்கப்படுவதும் அந்நாளிலேயே! எனவே அந்நாளில் என் மீது அதிகம் ஸலவாத் சொல்லுங்கள். உங்கள் ஸலவாத்துக்கள் எனக்கு எடுத்துக் காட்டப்படுகின்றன" என நபி ﷺ அவர்கள் கூறினார்கள்[1].

மேலுள்ள ஹதீஸை ஆதாரம் காட்டி, நபியவர்கள் ஆதம் عَلَيْهِ السَّلَام அவர்கள் படைக்கப்பட்ட தினத்திலேயே தன் மீது ஸலவாத் சொல்லுமாறு ஏவுகின்றார்கள் என்றால், நபியவர்கள் பிறந்த நாளில் அவர்கள் மீது ஸலவாத் சொல்வதென்பது மிகப் பொருத்தமானதென்றும், மீலாத் கொண்டாட்டம் என்பது நபி ﷺ அவர்கள் மீது ஸலவாத் சொல்வதற்கான ஒன்றுகூடல் தானே! என்றும் வாதிடுகின்றனர்.

தெளிவு

இவ்வாறு ஆதாரம் எடுப்பது சரியாக இருந்திருந்தால், நபித் தோழர்களும் பின் வந்த இமாம்களும், பிரத்தியேகமாக திங்கட்கிழமையை நபியவர்கள் மீது ஸலவாத் சொல்வதற்காக ஒதுக்கிக்கொள்வதில் போட்டி போட்டிக்கொண்டதை நாம்

1 அறிவிப்பவர்:அவ்ஸ் இப்னு அபூஅவ்ஸ் رضي الله عنه, நூல்: அபூதாவுத் 1047.

கண்டிருக்கவேண்டும். ஆனால், நபியவர்கள் பிறந்த தினமாகிய திங்கட்கிழமையில் அவர்கள் மீது ஸலவாத் சொல்வதற்குச் சிறப்புள்ளது என்பதாக எந்த அறிஞரும் கூறவில்லை! இது இவ்வாறிருக்கும் போது, நபி ﷺ அவர்கள் பிறந்த தினம் என ஆதாரப்பூர்வமாக நிரூபனமாகாத ரபீஉல் அவ்வல் 12ஆம் நாளை எவ்வாறு கொண்டாடுவது?!

ஐயம் 05

அவர்களின் ஆச்சரியமான வாதங்களில் இன்னொன்றுதான் நபியவர்களின் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் அவர்கள் மீது ஸலவாத்து சொல்வதும் ஸலாம் சொல்வதும், நபியைப் புகழ்வதும் மாத்திரம் தான் இருக்கின்றது. நீங்கள் ஏன் அதனை மறுக்கிறீர்கள்? என வாதிடுகின்றனர்.

தெளிவு

நபியவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டத்தை மறுப்பவர்கள் ஒரு நாளும் நபி ﷺ அவர்கள் மீது சலவாத்து சொல்வதையோ அல்லது அவரைப் புகழ்வதையோ மறுப்பதில்லை. மாறாக அவர்கள் எப்பொழுதும் எந்த நேரமும் அதிகமதிகம் நபியவர்கள் மீது ஸலவாத்து சொல்லக்கூடியவர்களாகவும், அதனை ஆர்வமூட்டக்கூடியவர்களாகவும்தான் இருக்கிறார்கள். என்றாலும் ஒரு நாளை அல்லது சில நாட்களை மாத்திரம் அதற்காக தனித்துவப்படுத்தி, அதிலே ஒன்று கூடி நபியவர்கள் மீது ஸலவாத்து சொல்வதைத்தான் அவர்கள் மறுக்கிறார்கள். ஏனெனில், அந்த வழிமுறை நபியவர்களின் ஸுன்னாவில் எங்குமே கிடைக்கப் பெறவில்லை. குறைந்தது ஒரு முறையாவது ஏதாவது ஒரு தினத்திலோ அல்லது ஏதாவது ஒரு குறித்த சந்தர்ப்பத்திலோ நபியவர்கள் தமது தோழர்களுடனோ அல்லது அவர்களின் தோழர்கள் தங்களுக்குள் ஒன்று கூடியோ இவ்வாறு செய்ததாக எந்த ஒரு ஆதாரமும் இல்லை. ஆனால் இவர்களோ குறிப்பிட்ட ஒரு இரவைக் குறித்து இதனைக் கொண்டாடுகிறார்கள்.

ஐயம் 06

أن جارية نذرت أن تضرب بالدف وتتغنى بين يدي رسول الله ﷺ إن رده الله سالما من إحدى غزواته، وأن النبي ﷺ قال لها: إن كنت نذرت فاضربي وإلا فلا.(اختصارا).

ஒரு முறை ஒரு யுவதிப்பெண்மணி நபியவர்கள் குறித்த யுத்தத்திலிருந்து எந்த ஆபத்துமின்றி திரும்பி வந்தால் மேளம் அடித்து பாட்டுப்பாடுவதாக நேர்ச்சை வைத்திருந்தாள். அதனைக் கேள்விப்பட்ட நபியவர்கள் "நீ நேர்ச்சை வைத்திருந்தால் அடித்துக்கொள், அவ்வாறு நேர்ச்சை வைக்கவில்லையென்றால் அதனை தவிர்த்து கொள்" என கூறினார்கள்[1].

மேற்குறிப்பிட்ட இந்த நபிமொழியை ஆதாரம் காட்டி 'நபியவர்கள் ஒரு போரிலிருந்து திரும்பி வந்ததற்கே இவ்வாறு சந்தோசத்தை வெளிப்படுத்தி கொண்டாடியிருக்கிறார்கள், அதனை நபியவர்களும் ஆதரித்திருக்கிறார்கள் என்றால், ஏன் நாம் அதனை விடப் பெரிய விடயமான நபியவர்கள் இந்த பிரபஞ்சத்திற்கு வருகை தந்த நாளை கொண்டாடக்கூடாது?" எனக் கேட்கிறார்கள்.

தெளிவு

சுப்ஹானல்லாஹ்! நபியவர்களின் வாழ்க்கையில் ஒரே ஒரு முறை நடந்த சம்பவத்தை எடுத்துக் கொள்ளும் இவர்கள் நபியவர்களின் வாழ்க்கையில் திரும்பத் திரும்ப வந்த அவர்களின் பிறந்த நாளை நபியவர்களோ அவருடைய

1 அறிவிப்பவர்: புரைதா رضي الله عنه, நூல்: திர்மிதி 3690, அஹ்மத் 23061.

தோழர்களோ கொண்டாடவில்லை என்பதை மறந்து விட்டார்கள் போலும்.

அதேபோன்று அந்தப் பெண்மணி ஏன் நபியவர்கள் உலகத்திற்கு வந்த நாளைக் கொண்டாடாமல் குறித்த அந்த போரிலிருந்து திரும்பி வந்ததைக் கொண்டாட நேர்ச்சை வைக்க வேண்டும்? மட்டுமல்லாது அந்தப் பெண்மணி மக்களை ஒன்று சேர்த்துக்கொண்டு ஒரு விழாவாக அதனைக் கொண்டாடவும் இல்லை. மாறாக, தான் வைத்த நேர்ச்சையை நிறைவேற்றுவதற்காகவே அதனைக் கொண்டாடி அந்த நேர்ச்சையை நிறைவேற்றிக் கொண்டாள். அவ்வாறின்றி அதனை ஒரு கொண்டாட்டமாக எடுத்திருந்தால் நபியவர்களின் பிறந்த நாளை கொண்டாடுபவர்கள் போன்று ஒவ்வொரு வருடமும் திரும்பத் திரும்ப அதனைக் கொண்டாடி இருக்க வேண்டும் .

ஐயம் 07

عن أنس بن مالك: أنّ النبيَّ ﷺ عقَّ عن نفسِهِ بعد النُّبوَّةِ.

நபி ﷺ அவர்கள் நபித்துவத்துக்குப் பின்னர் தனக்காக அகீகா கொடுத்தார்கள்[1].

மேலுள்ள ஹதீஸை நபியவர்களின் பிறப்பைக் கொண்டாட ஆதாரமாக முன்வைக்கின்றனர். இதோ பாருங்கள்! நபியவர்கள் பிறந்த போது அப்துல் முத்தலிப் அகீகா வழங்கியிருந்தும் தனது பிறப்பைக் கொண்டாடும் விதமாக நபியவர்கள் மீண்டும் அகீகா வழங்கியுள்ளார்கள். எனவே மீண்டும் மீண்டும்; சந்தோசத்தை வெளிப்படுத்த அனுமதியுண்டு என்பதற்கு இது ஆதாரமாகும் என வாதிடுகின்றனர்.

தெளிவு

இந்த ஹதீஸைப் பதிவு செய்த இமாம் பைஹகி அவர்களே இது ஒரு தவறான ஹதீஸ் என்றும் இமாம் நவவீ رحمه الله 'இது ஒரு பொய்யான செய்தி' என்றும்[2], இப்னு ஹஜர் رحمه الله 'ஊர்ஜிதமற்றது' என்றும்[3] கூறியுள்ளனர். எனவே இதனை ஆதாரமாகவே முன்வைக்க முடியாது.

1 அறிவிப்பவர்: அனஸ் رضي الله عنه, நூல்: பைஹகீ 09/300.
2 நூல்: மஜ்மூஃ (8/431).
3 நூல்: பத்ஹுல் பாரி (9/509).

ஐயம் 08

قال عُرْوَةُ، وثُوَيْبَةُ مَوْلاةٌ لأبِي لَهَبٍ: كانَ أبو لَهَبٍ أعْتَقَها، فأرْضَعَتِ النبيَّ ﷺ ، فَلَمّا ماتَ أبو لَهَبٍ أُرِيَهُ بَعْضُ أهْلِهِ بشَرِّ حِيبَةٍ، قالَ له: ماذا لَقِيتَ؟ قالَ أبو لَهَبٍ: لَمْ ألْقَ بَعْدَكُمْ غيرَ أنِّي سُقِيتُ في هذِه بعَتاقَتي ثُوَيْبَةَ.

உர்வா رحمه الله அவர்கள் கூறுகிறார்கள்: ஸுவைபா, அபூலஹபின் அடிமைப் பெண்ணாவார். அபூலஹப் அவரை விடுதலை செய்திருந்தார். அவர் நபி ﷺ அவர்களுக்குப் பாலூட்டினார். அபூலஹப் இறந்தபோது அவருடைய குடும்பத்தாரில் ஒருவர் அவரைக் (கனவில்) கண்டார். அபூலஹப் மோசமான நிலையில் அவருக்குக் காட்டப்பட்டார். அபூலஹபிடம், "(மரணத்திற்குப் பிறகு) நீ எதிர்கொண்டது என்ன?" என்று அவர் கேட்டார். "உங்களைவிட்டுப் பிரிந்தபின் ஒரு சுகத்தையும் நான் சந்திக்கவில்லை. ஆயினும், நான் ஸுவைபாவை விடுதலை செய்ததற்குப் பிரதியாக இந்த விரல்களினூடே எனக்கு நீர் புகட்டப்படுகிறது" என்று கூறினார்[1].

நபியவர்கள் பிறந்ததாக நற்செய்தி கூறிய தனது அடிமைப் பெண் ஸுவைபாவை அபூ லஹப் விடுதலை செய்ததனால் மறுமையில் அவனது தண்டனை குறைக்கப்படும் என்ற மேற்கூறிய ஹதீஸையும் ஆதாரமாக முன்வைக்கின்றனர். அல்குர்ஆன் இகழ்ந்து பேசிய ஒருவனுக்கே நபியவர்களின் பிறப்பினால் சந்தோசப்பட்டதனால் தண்டனை குறைக்கப்படும்போது ஏகத்துவவாதியான ஒரு முஃமின் நபியவர்களின் பிறப்பைக் கொண்டு சந்தோசப்படுவது எவ்வளவு உயர்ந்த நிலமையில் இருக்கவேண்டும் என

1 அறிவிப்பவர்: உம்மு ஹபீபா رضي الله عنها, நூல்: புஹாரி 5101.

வாதிடுகின்றனர்.

தெளிவு

இழிவுக்குப் பயந்து, பெண்களை உயிரோடு புதைத்து, ஆண் பிள்ளைகள் பிறக்கும் போது மாத்திரம் சந்தோசப்படும் காலத்தில், தனது சகோதரனின் மகனுக்கு ஆண் பிள்ளை பிறந்ததற்குச் சந்தோசப்பட்ட ஜாஹிலிய்யாக் கால ஒரு காபிரின் செயலை ஆதாரமாகக் காட்டுவது எவ்வளவு கேவலம்!

இதற்கு முன்னர் சொல்லப்பட்டதைப் போன்றே இதற்கும் கூறுகின்றோம். நபியவர்களைக் கொண்டு சந்தோசப்படுதல், அவரை நேசித்தல், மதித்தல் போன்றவற்றுக்குரிய சிறப்புண்டு என்பதல்ல இங்கு பிரச்சினை. மாறாக நபியவர்களின் வழிமுறைக்கு மாற்றமாக நடந்துவிட்டு நேசம் வைத்துள்ளோம் என வாதிடுவதே இங்கு பிரச்சினை.

ஐயம் 09

இமாம் ஸஹாவி رحمه الله அவர்கள், ஒருவரிடமிருந்து பின்வருமாறு எடுத்தெழுதுகிறார்கள்: "கிறிஸ்தவர்கள் தனது நபியுடைய பிறந்த நாளை ஒரு பெரும் பெருநாளாக எடுத்துக் கொண்டுள்ளார்கள் என்றால் முஸ்லிம்கள் அவ்வாறு தமது நபியுடைய பிறந்த நாளை கொண்டாடுவதற்கும் கண்ணியப்படுத்துவதற்கும் அவர்களை விட மிகவும் பொருத்தமானவர்கள்[1]."

தெளிவு

இவர்களுக்கான மிகவும் தெளிவான பதில், புஹாரி, முஸ்லிமிலே வரக்கூடிய பின் வரக்கூடிய ஹதீஸாகும்.

عن أبي سعيد الخدري: لَتَتَّبِعُنَّ سَنَنَ الَّذين من قبْلِكم شِبرًا بشِبرٍ، وذِراعًا بذِراعٍ حتى لو دَخَلوا جُحْرَ ضَبٍّ، لَتَبِعتُموهم، قُلْنا: يا رسولَ اللهِ، اليَهودُ والنَّصارى؟ قال: فمَن؟!

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், "உங்களுக்கு முன்னிருந்த (யூதர்கள் மற்றும் கிறித்த)வர்களின் வழிமுறைகளை நீங்கள் சாண் சாணாக, முழம் முழமாகப் பின்பற்றுவீர்கள். எந்த அளவுக்கென்றால், அவர்கள் ஓர் உடும்பின் பொந்துக்குள் நுழைந்தால் கூட நீங்கள் அவர்களைப் பின்பற்றி நுழைவீர்கள்";. நாங்கள், "அல்லாஹ்வின் தூதரே! (நாங்கள் பின்பற்றக்கூடியவர்கள் என்று) யூதர்களையும் கிறித்தவர்களையுமா (நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்)?" என்று கேட்டோம். அதற்கு நபி ﷺ அவர்கள், "வேறு யாரை?"

1 நூல்: அல்அஜ்விதுல் மர்ழிய்யஹ் (3/1117).

என்று (திருப்பிக்) கேட்டார்கள்[1].

1 அறிவிப்பவர்: அபூஸஊத் அல்குர்தி ﵁, நூல்: புஹாரி 3456, முஸ்லிம் 2669.

ஐயம் 10

நபியவர்களது பிறந்த தினத்தை கொண்டாடுவதில் மூழ்கியவர்களிடம் அது ஒரு மார்க்கத்தில் நூதனமான செயல் (பித்அத்) என்று நிரூபணமாகிவிட்ட பிறகு, அவர்கள் "ஆம், சரிதான், ஆனால் அது ஒரு நல்ல பித்அத், இமாம் இப்னு ஹஜர் மற்றும் வேறு அறிஞர்களும் அதனை நல்ல பித்அத் என்று கூறியிருக்கிறார்கள்" என வாதிடுகின்றனர்.

தெளிவு

இஸ்லாத்தில் 'நல்ல பித்அத்', 'வழிகேடான பித்அத்' என்றொன்று இல்லை. எல்லா நூதனங்களும் (பித்அத்துகளும்) வழிகேடு என்பது தான் நம்பத்தகுந்த உறுதியான அறிஞர்களிடம் காணப்படும் சரியான கருத்தாகும். அதனைத்தான் நபியவர்களின் ஹதீஸும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. இமாம் அபூஇஸ்ஹாக் அஷ்ஷாதிபி رحمه الله அவர்கள் குறிப்பிடுகிறார்கள் "எல்லா நூதனங்களும் வழிகேடே (குல்லு பித்அதின் ழலாலா) எனும் நபிமொழியானது அதன் பொதுப்படையான அர்த்தத்திலேயே நோக்கப்படவேண்டும். அதிலிருந்து எந்த ஒரு நூதனமும் விதிவிலக்கல்ல. இந்தவகையில் எந்தவொரு பித்அத்தும் நல்லது என்ற கருத்துக்கு இடமில்லை என்பதுதான் அறிஞர்களின் நிலைப்பாடாகும்[1]".

---

1 நூல்: ஃபதாவா அஷ்ஷாதிபி, பக் 18.

ஐயம் 11

عن جرير بن عبد الله: مَن سَنَّ في الإسلامِ سُنَّةً حسَنةً فلهُ أجرُها، وأجرُ مَن عمِلَ بِها من بعدِهِ، من غيرِ أنْ يُنقَصَ من أُجورِهِمْ شيءٌ...

"யார் இஸ்லாத்தில் ஒரு நல்ல வழிமுறையைத் தோற்றுவித்து, பின்னர் அதன் படி செயற்படுகின்றாரோ அவருக்கு அதற்கான கூலியோடு அதனைச் செய்வோருக்கான கூலியைப் போன்றதான கூலியும் செய்தவரின் கூலியில் எவ்விதக் குறைப்புமின்றி வழங்கப்படும்.[1]"

மேலுள்ள ஹதீஸை ஆதாரமாகக் கொண்டு நபியவர்களின் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதும் ஒரு நல்ல வழிமுறைதானே எனக் கூறுகின்றனர்.

தெளிவு

இது அவர்களது திரிபு விளக்கமாகும். குறித்த ஹதீஸின் சரியான அர்த்தத்தை அவர்கள் திரிபுபடுத்தியுள்ளனர். அத்தோடு குறித்த அந்த ஹதீஸின் பின்னணி பற்றிய அவர்களது அறிவீனத்தை அல்லது அறிவீன நடிப்பையும் வெளிப்படுத்துகின்றது.

இந்த ஹதீஸின் பின்னணி என்னவெனில், நபி ﷺ அவர்களிடம் கிராமவாசிகள் கூட்டம் ஒன்று கிழிந்த ஆடையணிந்து வந்தது. உடனே நபியவர்கள் அங்கு குழுமியிருந்த மக்களுக்கு தர்மம் செய்யுமாறு தூண்டினார்கள். நபியவர்களின் முகத்தில் மாற்றம் தென்படும் வரை அவர்கள் அமைதி காத்தனர். உடனே அன்ஸாரிகளில் ஒருவர் தங்கத்

1 அறிவிப்பவர்: ஜரீர் இப்னு அப்துல்லாஹ் ﵁, நூல்: முஸ்லிம் 1017.

துண்டொன்றை கொண்டுவந்து கொடுத்தார். அவரைத் தொடர்ந்து எல்லா மக்களும் கொண்டுவந்து கொடுத்தனர். அதனால் நபியவர்களின் முகம் மலர்ந்திருந்தது. அப்போது நபியவர்கள் இந்த "யார் இஸ்லாத்தில் ஒரு நல்ல வழிமுறையைத் தோற்றுவித்து..." என்ற ஹதீஸை கூறினார்கள்.

உண்மையில் இந்த ஹதீஸின் உண்மை அர்த்தம் என்னவெனில், "யார் நபி ﷺ அவர்களின் ஸுன்னாக்களில் எதையாவது ஒன்றை உயிர்ப்பித்தால்..." என்பதே அர்த்தமாகும். இதற்கான ஆதாரமாக பின்வருகின்ற ஹதீஸைக் குறிப்பிடலாம்.

"எனது வழிமுறையில் எனக்குப் பின்னர் கைவிடப்பட்ட ஏதாவதொன்றை யாராவது உயிர்ப்பித்தால் அவருக்கு அதனைச் செய்பவருக்கு வழங்கப்படும் கூலியைப் போன்று கூலியுண்டு. ஆனால் செய்தவரின் கூலியில் எக்குறைப்பும் இருக்காது. மேலும் யாராவது அல்லாஹ்வும், ரஸூலும் விரும்பாத பித்அத் ஒன்றினை உருவாக்கினால் அவருக்கு அதனைச் செய்வோருக்கு வழங்கப்படுவது போன்ற பாவம் வழங்கப்படும். ஆனால் செய்தவரின் பாவத்தில் எந்தக் குறைப்பும் ஏற்படமாட்டாது[1]".

இந்த ஹதீஸுக்கு இமாம் ஷாதிபீ رحمه الله அவர்கள் பின்வருமாறு விளக்கமளிக்கிறார்கள். "இங்கு ஸுன்னா வழிமுறை என்பது அந்த ஸஹாபி செய்தது போன்ற செயலையே குறிக்கின்றது. அதாவது அந்த ஸஹாபி ஸுன்னாவில் வலியுறுத்தப்பட்ட 'ஸதகா'வையே செய்தார்

1 அறிவிப்பவர்: அம்ர் இப்னு அவ்ஃப் அல்முஸனி ﵁, நூல்: அபூதாவுத் 174, 209, திர்மிதி 2677.

மாறாக மீலாத் நிகழ்வை அல்ல"[1].

1 நூல்: அல்இஃதிஸாம் 01/235.

ஐயம் 12

சில ஸஹாபாக்கள் நல்ல பித்அத்களை உருவாக்கியுள்ளனரே என்ற வாதத்தை முன்வைத்து, அதற்குப் பின்வரும் ஹதீஸையும் ஆதாரமாகக் காட்டுகின்றனர்

عن رفاعة بن رافع: كُنّا يَوْمًا نُصَلِّي وراءَ النبيِّ ﷺ، فَلَمّا رَفَعَ رَأْسَهُ مِنَ الرَّكْعَةِ قالَ: سَمِعَ اللهُ لِمَن حَمِدَهُ، قالَ رَجُلٌ وراءَهُ: رَبَّنا ولَكَ الحَمْدُ حَمْدًا كَثِيرًا طَيِّبًا مُبارَكًا فِيهِ، فَلَمّا انْصَرَفَ، قالَ: مَنِ المُتَكَلِّمُ قالَ: أنا، قالَ: رَأَيْتُ بضْعَةً وثَلاثِينَ مَلَكًا يَبْتَدِرُونَها أيُّهُمْ يَكْتُبُها أوَّلُ..

"ஒரு நாள் நபி ﷺ அவர்கள் பின்னால் தொழுதுகொண்டிருந்தோம். அவர்கள் ருகூவிலிருந்து தலையை உயர்த்திய போது 'ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ்' என்றார்கள். அப்போது பின்னால் நின்ற ஒரு மனிதர் 'ரப்பனா வலகல் ஹம்து ஹம்தன் கதீரன் தையிபன் முபாரகன் பீஹி' என்று கூறினார். தொழுகை முடிந்ததும் நபியவர்கள் "பேசியது யார்?" என்று கேட்டார்கள். அதற்கு அவர் 'நான் தான்' என்றார். அதற்கு நபியவர்கள் "முப்பது சொச்சம் மலக்குகள் அதனை பதிந்துகொள்வதற்குப் போட்டிபோட்டுக்கொண்டதை நான் கண்டேன்"[1].

'இந்த ஹதீஸின் படி அந்த ஸஹாபி நபியவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளாத இந்த திக்ரை புதிதாக உருவாக்கினார்; இது பித்ஆ ஹஸனாதானே' என வாதிடுகின்றனர்.

தெளிவு

இது பிழையான புரிதலாகும். ஏனெனில் ஸஹாபாக்களுக்கு

1 அறிவிப்பவர்: ரிஃபாஆ இப்னு ராபிஃ رضي الله عنه, நூல்: புஹாரி 799.

மற்றோருக்கில்லாத சிறப்பு காணப்படுகிறது. அதாவது அவர்கள் நபியவர்களின் முன்னிலையில் வாழ்ந்தோராவர். அவர்கள் செய்யும் செயலை நபியவர்கள் அங்கீகரித்தால் அது ஸுன்னா அந்தஸ்தைப் பெறுகின்றது. அதாவது 'ஸுன்னா தக்ரீரிய்யா - நபியவர்களின் அங்கீகாரத்தைப் பெற்ற ஸஹாபியின் செயல்' எனும் அந்தஸ்த்தைப் பெறுகின்றது. ஆகவே அது பித்அத் ஆக பார்க்கப்படக்கூடாது. உஸூல் சார்ந்த உலமாக்களும் இவ்வாறுதான் இதனை அடையாளப்படுத்துகின்றனர்.

ஐயம் 13

உமர் ﷜ அவர்கள் நபியவர்களின் வஃபாத்துக்குப் பின்னர் ஒரு இமாமுக்குப் பின்னால் ஜமாஅத்தாக தராவீஹ் தொழும் வழக்கத்தை உருவாக்கினார்கள். அதுவும் பித்அத் ஹஸனாதானே என வாதிடுகின்றனர்.

தெளிவு

உமர் ﷜ அவர்களின் இந்நிகழ்வை அவதானிப்பவர் அதனை மீலாதுக்கு ஆதாரமாகக் கொள்வது பலவீனமானது என்பதையே கண்டுகொள்வார். ஏனெனில் இதனை நபி ﷺ அவர்களே செய்துவிட்டார்கள். அதாவது ஸஹாபாக்களை வைத்து நபியவர்களே தராவீஹ் தொழுகையை ஜமாஅத்தாகத் தொழுதுவிட்டார்கள். என்றாலும் அது பர்ழாக்கப்பட்டு விடும் எனப் பயந்து மீண்டும் தொழுவிக்கவில்லை. எனவேதான் அபூபக்ர் ﷜ அவர்களின் காலத்தில் ஜமாத் விடுபட்டிருந்தது. பின்னர் உமர் ﷜ அவர்கள் மீண்டும் ஆரம்பித்து வைத்தார்கள். உண்மை இவ்வாறிருக்க நபிகளாரின் காலத்தில் இல்லாத ஒன்றை உமர் ﷜ அவர்கள் புதிதாக ஆரம்பித்தார்கள் என்று எவ்வாறு கூறமுடியும்? இதுவும், இல்லாத ஒரு மீலாத் விழாவை உருவாக்குவதும் எம்மாத்திரம்?!

ஐயம் 14

அல்குர்ஆனை ஒன்றுதிரட்டல், அதற்கு குறியீடுகளும் புள்ளிகளும் இடுதல் போன்ற நபியவர்களின் மரணத்தின் பின்னர் நபித்தோழர்கள் செய்த சில செயற்பாடுகளை ஆதாரமாக முன்வைக்கின்றனர். இவைகள் அனைத்தும் அழகிய பித்அத்களாகும். மீலாத் விழாக் கொண்டாட்டமும் அதனைப் போன்றதே என வாதிடுகின்றனர்.

தெளிவு

செய்வதற்கான தேவையும், தூண்டுதலும் இருப்பதோடு செய்வதை விட்டும் தடுக்கும் எதுவும் இல்லாமலிருந்தும் நபியவர்கள் செய்யாதவைகளே இகழப்பட்ட பித்அத்தாகும். அந்த அடிப்படையில் நபியவர்கள் மீலாத் விழாவைக் கொண்டாடுவதற்காக காணப்பட்ட தடை என்ன? அதனைக் கொண்டாடுவதற்கான காரணம் நபியின் மீது கொண்ட நேசம் என்றால் நபித்தோழர்கள் நபியவர்களை தமது உயிருக்கு மேல் நேசித்த போதும் அவர்கள் ஏன் கொண்டாடவில்லை? அதற்கு மார்க்கத்தில் அனுமதியில்லை என்பதே பதிலாகும்.

அல்குர்ஆனை ஒன்று திரட்டியமைக்கான காரணம் அதில் குறைகள் ஏற்படாமல் பாதுகாப்பதாகும். இத்தேவை நபியவர்களின் காலத்தில் இருக்கவில்லை. நபியவர்கள் மரணித்த பின் சில மனிதர்கள் அல்குர்ஆனின் சில வசனங்கள் சம்பந்தமாக முரண்பட்டுக்கொண்ட போது அதனை ஒரு ஏட்டில் தொகுக்கும் அவசியம் ஏற்பட்டது. அரபிகளல்லாத அநேகர் இஸ்லாத்தில் நுழைந்து மக்கள்

அரபு மொழியை விட்டு தூரமாகி வேற்று மொழிகள் அவர்களிடம் புகுந்துவிட்டதனால் அல்குர்ஆனை உரிய விதத்தில் ஓதுவதற்காக அதற்கு புள்ளியும் குறியீடுகளும் இடுவதற்கான தேவை ஏற்பட்டது. இதனைத்தான் அறிஞர்கள் 'மஸ்லஹா முர்ஸலா' என அழைப்பார்கள்.

ஐயம் 15

'பிறந்த தினத்தைக் கொண்டாடுவது வணக்க வழிபாடுகளில் அடங்காது, மாறாக (சமூக) வழக்கங்களில் உள்ளடங்கும். பிறகு எதற்காக அவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறீர்கள்?' என்று வாதிடுகின்றனர்.

தெளிவு

இது அவர்களின் தப்புதவற்கான முயற்சியும், நடைமுறையில் நடக்கும் யதார்த்தத்திற்கு புறம்பாகக் கூறப்படும் நழுவலுமாகும்.

குர்ஆன் ஓதுதல், திக்ரு செய்தல், துஆக் கேட்டல், நபி ﷺ அவர்களின் சரிதை மற்றும் நற்குணங்கள் வாசித்தல் போன்ற நிகழ்வுகளை அரங்கேற்றுவதற்காக ஒன்று கூடுவதை வணக்கம் என அழைக்காமல் வேறு எவ்வாறு அழைப்பது?! இவற்றையெல்லாம் அல்லாஹ்வை நெருங்கும் நோக்கத்தோடு அவர்கள் செய்வதோடு, மக்களையும் இவற்றுக்கு ஆர்வமூட்டி அழைப்புவிடுக்கின்றனர். நன்மையையும் கூலியையும் எதிர்ப்பார்த்து செய்யும் பெரும் நற்காரியங்களாக இதனை அவர்கள் கருதுகின்றனர்.

இவ்வாறு செய்து விட்டு, இது வணக்க வழிபாடு அல்ல, (சமூக) வழமை என்று எவ்வாறு கூற முடியும்;!? அப்படியென்றால் வணக்கம் என்பது என்னவோ..!?

ஐயம் 16

நபி பிறந்த தினத்தை கொண்டாடுவது தடை இல்லை என்பதற்கான அவர்களின் வாதங்களில் ஒன்றுதான் தலை சிறந்த அறிஞரின் சேவைகள் மற்றும் சமூகத்திற்காக செய்த தியாகங்கள், அவரது சரிதை போன்றவற்றை வெளிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்படும் மாநாடுகள் மற்றும் வைபவங்களோடு நபி பிறந்த தினம் கொண்டாடுவதை ஒப்பீடு செய்து பேசுவதாகும்.

அதாவது நபி ﷺ அவர்களது சரிதை மற்றும் சிறப்பம்சங்கள் ஞாபகம் கூறப்படுவதை முன்னிட்டு ஒன்றுகூடல் ஏற்பாடு செய்யப்படுவது ஏனைய ஒன்றுகூடல்களை விட எவ்வளவோ மேல் என்று வாதிடுகின்றனர்.

தெளிவு

01- உன்மையில் நபி ﷺ அவர்களின் சரிதை மற்றும் அவர்களுக்கு எதிராக வைக்கப்படும் வாதங்களுக்கு தெளிவு வழங்குதல் போன்ற அம்சங்களை முன்னிட்டு மாநாடுகளோ, கருத்தரங்குகளோ ஏற்பாடு செய்வது மிகச் சிறப்பான வழிமுறை என்பதில் எல்லளவும் சந்தேகமில்லை. அது போக இவ்வாறான மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் ஒரு முறை அல்லது பலமுறை ஒரு நாட்டில் அல்லது பல நாடுகளில் அரங்கேற்றப்படுவதை எந்தவகையிலும் மேற்கோள் காட்டி ஆதாரம் காட்ட முடியாது.

மாநாடு அல்லது கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்படுவது, குறித்த அறிஞரைக் கொண்டாடுவதற்கோ சந்தோசத்தை

வெளிப்படுத்துவதற்கோ அல்ல, மாற்றமாக அவர் பற்றிய அறிவு மற்றும் அவரது சரிதை, சேவைகள் போன்றவற்றை சமூகமயப்படுத்த வேண்டும்; அவர் பற்றிய தெளிவில்லாத முஸ்லிம்கள் மற்றும் ஏனையோர் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்.

02- இந்த மாநாடுகளுக்கென்று குறிப்பிடப்பட்ட கால நேரங்கள் கிடையாது. அவ்வாறே குறித்த அறிஞர் பிறந்த தினத்தை முன்னிட்டு மாநாடுகள் ஏற்பாடு செய்யப்படுவதற்கும் அனுமதி கிடையாது. மாநாடுகள் அவருக்கான பிறந்த தின கொண்டாட்டம் அல்ல. அவை அவருடைய பிறந்த தினத்தோடு தொடர்புடையதுமல்ல. முழுக்க முழுக்க அவற்றில் கலந்து கொள்ளக் கூடியவர்கள் மற்றும் ஏற்பாடு செய்பவர்களின் நலனோடு தொடர்புபட்ட அம்சமாகும்.

ஐயம் 17

'நபி ﷺ அவர்கள் பிறந்த தினத்தில் நபியவர்களின் சீராவை (சரித்திரத்தை) மக்களுக்கு ஞாபகமூட்ட ஒன்று கூடுவது என்பது ஹிஜ்ரத், நபித்துவம் மற்றும் பத்ர் உடைய தினங்களிலும், வெள்ளி ஜுமுஆவுடைய மிம்பரிலும் மக்களுக்கு கூறுவது போன்று தான்' என வாதிடுகிறார்கள். ஏன் நபி ﷺ அவர்கள் பிறந்த தினத்தில் சீராவை எடுத்துக் கூறுவதை தடுக்கிறீர்கள்?? ஏனைய நிகழ்வுகளை அனுமதிக்கிறீர்கள்?

தெளிவு

இதுவும் தவறாகும். ஹிஜ்ரத், நபித்துவம், யுத்தங்கள் போன்ற நிகழ்வுகளை வெள்ளி மிம்பர்களில் கூறுபவர்கள் நபியவர்களின் பிறப்பு மற்றும் இறப்பு போன்றவைகளையும் பிரசங்கம் செய்கிறார்கள். அவைகளில் ஒன்றையேனும் மறுக்கவில்லை.

இதுவல்ல எமது வாதத்தின் கருப்பொருள், மாறாக இதுபோன்ற நிகழ்வுகளுக்கு ஒன்று சேர்ந்து, அதற்கு அழைப்பு விடுத்து, குறித்த ஒரு காலத்தில், குறித்த ஒரு தினத்தில் தொடர்ச்சியாக கொண்டாடுவதாகும்.

ஐயம் 18

'மீலாதை பெரும்பான்மை இமாம்கள் ஆதரிக்கின்றனர். இப்னு தைமியா அவர்களை பின்பற்றும் ஒரு சில கடும்போக்காளர்களை தவிர' என்று கூறுகின்றனர்.

தெளிவு

இதற்கான தெளிவை மூன்று விதமாக வழங்கலாம்.

1. உண்மை மற்றும் ஆதாரத்தின் அடிப்படையிலேயே முடிவு இருக்குமே தவிர அதிக எண்ணிக்கையை வைத்து அல்ல.

2. ஆரம்பகால இமாம்களான நான்கு மத்ஹபுகளின் இமாம்களோ, ஏனைய இமாம்களோ எவரும் மீலாதை அனுமதிக்கவும் இல்லை. கொண்டாடவும் இல்லை. பின்னர் எவ்வாறு பெரும்பான்மை இமாம்கள் ஆதரித்தனர் என்று கூற முடியும்???

3. இப்னு தைமிய்யா அவர்களை பின்பற்றுவோர் மாத்திரம் மீலாதை தடுக்கின்றனர் என்று கூறுவது பிழையான வாதமாகும். இவர்கள் அல்லாத பலர் தடுத்துள்ளனர்.

அல்லாமா தாஜுத்தீன் அல் பாகிஹானீ அல் மாலிகீ அவர்கள் கூறுகிறார்: 'குர்ஆனிலோ சுன்னாவிலோ மீலாத்திற்கான எந்த அடிப்படை ஆதாரங்களையும் நான் அறியவில்லை. மாறாக இது நூதன அனுஷ்டானம் (பித்ஆ) ஆகும்'(1).

1 நூல்: அல்மவ்ரித் பீ அமலில் மௌலித், பக் 20.

இமாம் அபூ இஸ்ஹாக் அஷ்ஷாதிபீ ﷺ கூறுகின்றார்கள், 'இன்று மக்கள் மத்தியில் அறியப்பட்டுள்ள மீலாத் நிகழ்வு ஒரு நூதன அனுஷ்டானமாகும். அது வழிகேடாகும்'[(1)].

1 நூல்: ஃபதாவா அஷ்ஷாதிபி, பக் 203.

முடிவுரை

இன்று முஸ்லிம் சமூகம் பெரும் அபாயத்தில் சிக்கியுள்ளது. நாலாபுறத்திலிருமிருந்தும் எதிரிகள் அவர்களைத் தாக்கிக்கொண்டுள்ளனர். எனவே அவர்களை பிளவுபடுத்தும் இது போன்ற விடயங்களைப் பேசுவது பொருத்தமானதா? என சிலர் கேள்வியெழுப்பலாம்.

ஆம், முஸ்லிம் சமூகம் பாரிய அபாயங்களை எதிர்கொண்டுள்ளது என்பது உண்மைதான்.

அதில் ஒன்றுதான் இஸ்லாத்தின் எதிரிகளின் சதிகள்.

அவ்வாறான அபாயங்களில் இன்னுமொன்றுதான் பல்வேறு நூதன அனுஷ்டானங்களும், அனாச்சாரங்களும் முஸ்லிம் சமூகத்தில் மலிந்துகாணப்படுவதாகும். எனவே சமூகத்தைப் பாதுகாத்து, ஏகத்துவம் மற்றும் சுன்னாவின் மீது ஒற்றுமைப்படுத்துவதற்காக இது போன்ற அனாச்சாரங்களை விட்டும் எச்சரிப்பது சமூகத்திற்கு விசுவாசமாக நடப்போரின் கடமையாகும். இணைவைப்புக்கு அடுத்ததாக செய்யப்படும் பாவங்களில் மகாபெரிய பாவம் இந்த பித்அத்கள்தான். அதனால்தான் இப்லீஸுக்கு சாதாரண பாவத்தை விட பித்அத் என்ற பாவம் மிக விருப்பமானதாகும்.

இறுதியாக,

தெளிவான ஆதாரங்களை முன்வைத்து சந்தேகங்களுக்கு ஆதாரபூர்வமான, அறிவுபூர்வமான பதில்கள் வழங்கப்பட்ட பின்னரும் அதிகமான மக்கள் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாமைக்குக் காரணம் பல்லாண்டுகளாகப் பின்பற்றி வரும் வழமையும், தமது மூதாதையர்கள் செய்து வந்தவற்றை விடக்கூடாது அல்லது அவர்களை

பிழைகாணவேண்டுமே என்ற எண்ணமுமாகும்.

எங்களுக்கும் அனைத்து முஸ்லிம்களுக்கும் அல்லாஹ் அவனது தனிப்பெரும் அருளைக் கொண்டு சத்தியத்தைக் காட்டித் தந்து, அதனைப் பின்பற்றவும், அசத்தியைக் காட்டித்தந்து, அதனை விட்டுத் தவிர்ந்துகொள்ளவும் உதவி செய்யுமாறு அல்லாஹ்விடம் இறைஞ்சுகின்றோம். நபியவர்கள் கேட்ட பின்வரும் பிரார்த்தனையை நாமும் கேட்கின்றோம்.

இறைவா! (வானவர்களாகிய) ஜிப்ராயீல், மீக்காயீல், இஸ்ராஃபீல் ஆகியோரின் அதிபதியே! வானங்கள் மற்றும் பூமியை முன்மாதிரியின்றிப் படைத்தவனே! மறைவானவற்றையும் வெளிப்படையானவற்றையும் அறிந்தவனே! நீ உன் அடியார்களிடையே அவர்கள் கொண்டிருந்த கருத்துவேறுபாடுகள் குறித்து தீர்ப்பு வழங்குவாய். மாற்றுக் கருத்து கொள்ளப்பட்டாலும் சத்தியத்திலேயே உன் தயவால் என்னை நிலைத்திருக்கச் செய்வாயாக! நீ நாடியவர்களை நேரான வழியில் நீயே செலுத்துகிறாய்.